தக்க தருணத்திற்கு உதவும் சத்தியங்கள்

பேரா. டான் டீ வெல்ட்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

தக்க தருணத்திற்கு உதவும் சத்தியங்கள் பத்து

பேராசிரியர் டான் டிவெல்ட்

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023
IMMANUEL GOSPEL LIBRARY ★ BANGALORE-23 ★
Book No. 258

தமிழாக்கம்
டாக்டர் வி. ஞானசிகாமணி
எம்.ஏ., பி.எச்.டி., டிப். தெலு....

வேதாகம இலக்கிய நிலையம்
மாதவரம்
சென்னை – 600 060.

முதல் பதிப்பு : திசம்பர் 1976
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 1980
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர் 1998

நூல்கள் கிடைக்குமிடம் :

* தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம்
378,24 ஆர்.கே. அடுக்ககம்,
19வது பிரதான சாலை
அண்ணா நகர் மேற்கு
சென்னை 600 040.

* பஜார் வீதி
பிச்சாட்டூர், சித்தூர் மாவட்டம்
A.P. 517587.
Phone : 08576 - 65747, 65748

அச்சிட்டோர் :

மெய்ப்பொருள் அச்சகம்,
278, கொன்னூர் நெடுஞ்சாலை,
அயன்புரம், சென்னை – 600 023.
போன் : 6449032.

TEN TIMELY TRUTHS

Prof. **DON DEWELT**

Author of :

Romans Realized
Acts Made Actual
The Gospel of mark
If you want to Preach
The Church in the Bible
The Power of the Holy Spirit
Sacred History and Geography
Paul's Letters to Timothy And Titus
If you want to be a Soul Winner
If you want to Write for Christ
LEVITICUS

First Edition : December, 1976

Second Edition : April, 1980

Third Edition : September 1998

Written in Tamil by

Dr.V. Gnanasikhamani M.A., Ph.D., Dip. Tel.,

Printed at :

Meipporul Achakam,
278, Konnur High Road,
Ayanavaram, Chennai - 600 023.
Phone : 6449032

முதல் பதிப்பின் முன்னுரை

நாம் காணும் உலகங்களும், நமது காட்சிக்கு அப்பாற்பட்டு விளங்கும் உலகங்களும் ஏதோ எதிர்பாராமல் தோன்றியனவல்ல. தேவனுடைய அநாதி திட்டத்தின்படி எல்லாம் படைக்கப்பட்டன. (ஆதி 1–2). எல்லா உலகங்களும் தேவன் உருவாக்கி அமைத்த இயற்கை விதிகளின் முறைமையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதனை விஞ்ஞானம் நாளும் நிரூபிக்கின்றது.

இதனையே மகாகவி எ.ஆ. கிருஷ்ணபிள்ளை, "சொல் லொன்றால் அனைத்துலகும் தோற்றுவித்தாய்; தோற்றியவை எல்லாம் இங்கொருபடித்தாய் யின்றளவு நின்றியல... வைத்தாய்" என்று பாடுகின்றார். தேவன் இப்பொழுது இருக்கும் உலகங்களை நீக்கி வேறு புதிய உலகங்களைப் படைக்கும் காலம் வரைக்கும் இந்நிலை நீடிக்கும் என்பதை வேதவாக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. (வெளி 21 –22; II பேது. 3 : 10–14).

பழைய வானங்களும் பழைய பூமியும் எப்பொழுது அழியும்? புதிய பூமியும் புதிய வானங்களும் எப்பொழுது படைக்கப்படும்? "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.... அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கின்றோம்." (II பேதுரு 3 : 10–13).

பூமியும் வானங்களும் பெறப்போகும் இந்த புதுமை மாற்றம் 'கர்த்தருடைய நாளில்' அதாவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் என்பதைத் தெளிவாக அறிகின்றோம். ஆனால், அந்த இரண்டாம் வருகைக்கு முன்னால், மக்கள் இனமும் மீட்கப்பட்டாகவேண்டும். ஏன்

என்றால் தேவனுடைய படைப்பின் மணிமுடியாக (ஆதி. 1 : 26; 2 : 7) விளங்கிய மனிதன் தன்னுடைய கீழ்ப்படியாமையினாலே மாயைக்கும், பாவத்திற்கும் நித்திய அழிவுக்கும் தன்னை இலக்காக்கிக் கொண்டான். மேலும் மனிதனுடைய கீழ்ப்படியாமையின் நிமித்தம் பூமியும் சாபத்திற்குட்பட்டது. (ஆதி 3 : 1–19)

ஆனால், தேவன் அன்பாகவே இருக்கின்றார். (I யோவான் 4 : 8) இந்த அன்பின் விளைவாக மனிதன் மாயையையும், பாவத்தையும் வென்று மீண்டும் நித்திய வாழ்விற்குள் வருவதற்குத் தமது திருமைந்தர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவன் வழி வகுத்துள்ளார். (எபி 9 : 12,28) இயேசு பெருமான் தமது முதலாம் வருகையிலே இதனை நமக்குச் செய்தருளினார்.

இந்த நூலிலுள்ள பத்து சத்தியங்களும், இந்த வாழ்க்கையிலே தக்க தருணத்திற்கு உங்களுக்கு உதவுகின்றன; இந்தத் தக்க தருணம் இந்த உலகத்தில் நாம் வாழும் காலமே! இந்தச் சத்தியங்கள் : புதிய பூமி – புதிய வானங்களின் நிலையான வாழ்வுநோக்கி உங்களைப் புதுப்பிக்கின்றன. மறுரூபமடையச் செய்கின்றன. நீங்கள் இழந்த தேவ மகிமையையும் மோட்ச வாழ்வையும் திரும்பப் பெறுவதற்கு உங்களை வழிநடத்துகின்றன. விண்ணுலகத்தின் குடிமக்களாக்குகின்றன.

அற்புதமான இந்த நூலை நீங்கள் படிக்கையில், "நானே சத்தியம்" (யோவான் 14 : 6) என்றும், "உமது வசனமே சத்தியம்" (யோவான் 17 : 17) என்றும் திட்டவட்டமாகக் கூறியவர் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக.

கிறிஸ்து இயேசுவின் ஊழியன்

வி. ஞானசிகாமணி

சத்தியத்தைப் போலத் தக்க தருணத்திற்கு உதவுவது வேறு எதுவும் இல்லை.

உமது வசனமே சத்தியம்

யோவான் 17 : 17

நூல் விவரம்

சத்தியம்	1.	வேதாகமம் கடவுளின் திருவாக்கு	11
”	2.	வேதாகமத்தில் உங்களுக்கும் எனக்கும் கடவுளின் சித்தம் அடங்கியிருக்கிறது.	24
”	3.	கடவுளின் சித்தத்திற்கு கீழ்படியாமை எல்லாம் பாவம்	28
”	4.	எல்லாருமே பாவம் செய்துள்ளனர்	32
”	5.	பாவத்தின் சம்பளம் மரணம்	36
”	6.	இயேசு மனித உடலில் கடவுள்	42
”	7.	இயேசு கிறிஸ்து பாவத்தின் சம்பளத்தை செலுத்தினார்	50
”	8.	மனிதன் இரட்சிப்படைய கட்டாயம் செய்ய வேண்டியது சிறிது உண்டு.	58
”	9.	நற்செய்தியின் நன்மைகள் பொன்னிலும் மேலானவை.	82
”	10.	நீங்கள் இயேசுவை என்ன செய்யப் போகிறீர்கள்?	88

தக்க தருணத்திற்கு உதவும் சத்தியங்கள் பத்து

அன்பார்ந்த நண்பரே! நம்முடைய தாற்காலிகமான, ஆனால் பரலோக முக்கியத்துவம் வாய்ந்த வாழ்க்கையிலே தக்க தருணத்திற்கு உதவுவது எது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? நமது வாழ்க்கையிலே, "சத்தியத்தைப்போலத் தக்க தருணத்திற்கு உதவுவது வேறு எதுவும் இல்லை" என்று நான் நினைக்கிறேன். நீங்களும் என் கருத்துக்கு உடன்படுகின்றீர்கள் என்பதைத் திட்டமாக அறிகின்றேன். ஏன் என்றால், சத்தியத்தை நாம் ஒப்புக் கொண்டுதானே ஆகவேண்டும். இந்த விருப்பமும் நமக்கு இயல்பாகவே உண்டு அல்லவா?

ஆம், சத்தியத்தைப் போலத் தக்க தருணத்திற்கு உதவுவது வேறு எதுவும் இல்லை? ஏன் என்றால், நீங்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், யாருடனும் சத்தியத்தைப் பேசலாம்; சத்தியத்தைப் பயன்படுத்தலாம். சத்தியம் என்னும் இந்த மேன்மையான பொருளைக் குறித்து இயேசுவானவர், 'உமது வசனமே சத்தியம்' (யோவான் 17 : 17) என்று கூறியுள்ளார். நாம் ஆராய்ந்து பார்க்க விரும்பும் முதல் சத்தியம் இதுதான்.



விஞ்ஞான முன்னறிவு

வேதாகமம் கடவுளின் திருவாக்கு என்பதை நிரூபிக்கிறது

நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னால் வேதாகமம் வெளிப்படுத்தியுள்ள விஞ்ஞான உண்மைகள்

1. உலகம் உருண்டையாய் இருக்கிறது.

> "அவர் பூமிஉருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்"
> (ஏசாயா 40 : 22)

2. பூமி அந்தரத்தில் தொங்கவைக்கப்பட்டுள்ளது.

> "அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்."
> யோபு 26 : 7.

(பெரிய யானைகள் அல்லது முதலைகள் அல்லது இவைபோல்வன உலகத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தன என்று மனிதர்கள் ஒரு காலத்தில் நம்பினார்கள்)

3. ஒளியைப் பிரிக்கலாம்.

வெளிச்சம் பகிர்ந்தளிக்கப்படும் இடத்திற்கு வழி யாது? (யோபு 38 : 24, கத்தோலிக்க மொழியாக்கம்)

(நாம் பட்டகை மூலம் ஒளியை வெவ்வேறு நிறங்களாகப் பிரிக்கிறோம்.)

4. கடல்கள் எல்லாம் ஒரே அடிப்பரப்பினை உடையன.

பின்பு தேவன் : வானத்தின் கீழே இருக்கிற தண்ணீர் ஓரிடத்தில் சேரவும்.... கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன்..... சேர்ந்த தண்ணீருக்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார். ஆதியாகமம் 1 : 9–10.

(பூமியின் பெரிய சமுத்திரங்கள் எல்லாம் ஒன்றொடொன்று இணைக்கப்பட்டுள்ளன; எல்லாம் உண்மையில் ஒரே சமுத்திரமாய் இருக்கின்றது. மனிதர் உலகத்தைச் சுற்றிக் கடல் பிரயாணம் செய்து கண்டுபிடிப்பதற்கு முன்னால் வேதாகமம் இதனைக் கூறியுள்ளது.)

மிகப் பழங்காலத்தில் இத்தகைய
செய்திகளைக் கடவுள் மட்டும்
வெளிப்படுத்தி இருக்கமுடியும்

நிறைவேற்றப்பட்ட தீர்க்கதரிசனங்கள்

வேதாகமம் கடவுளின் திருவாக்கு என்பதை நிரூபிக்கின்றன

கடவுள் வேதாகமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தவை:

1. பாபிலோன் பாழாக்கப்படும். (ஏசாயா 13 : 19–20)

19. ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும்.

20. இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை, தலைமுறைதோறும் அதில் ஒருவரும் தங்கித்தரிப்பதுமில்லை; அங்கே அரபியன் கூடாரம் போடுவதுமில்லை; அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதுமில்லை.

அது அப்படியே நடந்திருக்கிறது!

2. எகிப்து வலிமை குன்றிய அரசாக விளங்கும்
(எசேக்கியல் 29 : 14–15)

> 14. எகிப்தியரின் சிறையிருப்பைத் திருப்பி, அவர்களை அவர்களுடைய பிறந்த தேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பி வரப்பண்ணுவேன்; அங்கே அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள்.

> 15. அது இனி வேற்றினத்தார் மேல் தன்னை உயர்த்தாமல், மற்ற ராஜ்யங்களிலும் அற்பமான தாயிருக்கும்; அவர்கள் இனி வேற்றினத்தார்களை ஆளாதபடிக்கு அவர்களைக் குறுகிப்போகப்பண்ணுவார்.

அது அப்படியே இருக்கிறது!

3. நினிவே மறைக்கப்படும், அதாவது புதைந்து அழிந்துபோம்.
(நாகூம் 3 : 7,11)

> 7. அப்பொழுது உன்னைக் காண்கிறவனெல்லாம் நினிவே பாழாய்ப் போயிற்று, அதற்காகப் புலம்புகிறவர் யார்? ஆறுதல் சொல்லுகிறவர்களை எங்கே தேடுவே னென்று சொல்லி, உன்னை விட்டோடிப்போவான்.

> 11. நீயும் வெறிகொண்டு ஒளித்துக் கொள்வாய்; நீயும் உன் சத்துருவுக்குத் தப்ப அரணான கோட்டையைத் தேடுவாய்.

அது அவ்வாறே நடந்திருக்கிறது!

4. புற ஜனத்தார் காலம் நிறைவேறுமளவும் எருசலேம் புற இனத்தவரால் மிதிக்கப்படும். (லூக்கா 21 : 24).

> 24. பட்டயக் கருக்கினாலே விழுவார்கள். சகல புற இனத்தார்களுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புற இனத்தாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புற இனத்தாரால் மிதிக்கப்படும்.

அது அவ்வாறே நடந்திருக்கிறது!

கடவுளால் மட்டுமே இத்தகைய செய்திகளைத் தீர்க்க தரிசனமாய் அறிவிக்கமுடியும்.

வேதாகமம் கடவுளின் திருவாக்கு ஆகையினால் அது நம்முடைய இதயத்துடன் பேசுகிறது.

> "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." எபிரெயர் 4 : 12.

வேதாகமம் நமது இதயத்துடன் பேசி, நம்மை நல்லவர்களாக மாற்றுகிறது என்னும் உண்மையானது, இது கடவுளின் திருவாக்கு என்பதை மெய்ப்பிக்கிறது.

வேதாகமம் கடவுளின் திருவாக்கு என்பதை நீங்கள் நம்புகிறீர்கள் அல்லவா?

வேதாகமம் கடவுளின் திருவாக்கு

வேதாகமம் கடவுளின் திருவாக்கு என்பது நாம் ஆராயும் முதல் சத்தியம். வேதாகமம் பரிசுத்த ஆவியானரின் ஏவுதலினால் அருளப்பட்ட கடவுளின் திருவாக்கு என்று விஞ்ஞான பூர்வமாகவும் அறிவுக்கு உகந்த வழியிலும் நம்பமுடியாது என்னும் எண்ணம் நாட்டில் சிலரிடையே நிலவி வருகின்றது. ஆனால், இக்கருத்து உண்மையினை அடிப்படையாகக் கொண்டது அன்று. கவனியுங்கள் வேதாகமம் வெளிப்படுத்தும் விஞ்ஞான முன்னறிவு அது கடவுளின் திருவாக்கு என்பதை நிரூபிக்கிறது. இங்கே சில வியக்கத்தக்க செய்திகள் நமக்கு உண்டு. நீண்ட நெடுங் காலத்திற்கு முன்னால் வேதாகமம் வெளிப்படுத்தியுள்ள வியக்கத்தக்க விஞ்ஞான உண்மைகளைச் சிந்தித்துப் பாருங்கள்.

1. **உலகம் உருண்டையாய் இருக்கிறது.** 'அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்.' (ஏசாயா 40 : 22). இது, நமது ஆண்டவர் இந்த உலகத்திற்கு வருவதற்குப் பல நூறு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு தீர்க்கதரிசியால் எழுதப்பட்டது. ஏசாயா இதனைத் தமது கையெழுத்துச் சுவடியில் எழுதுவதற்கு முன்னால் கடவுள் இதனை அவருடைய மனத்தில் போடவில்லை என்றால், அவரால் எப்படி இந்த விஞ்ஞான வருணனையான வாக்கியத்தை எழுதமுடியும்?

2. **பூமி அந்தரத்தில் தொங்க வைக்கப்பட்டுள்ளது.** மறுபடியும், வேதத்தின் மிகப்பழைய ஆகமத்தில் நாம் திடுக்கிடச் செய்யும் சொற்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:

   'அவர் உத்தர மண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்தில் தொங்க வைக்கிறார்' (யோபு 26 :7).

இயேசு பெருமான் உலகத்திற்கு வருவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகமான காலத்துக்கு முன்னரே கடவுள் பூமியை அந்தரத்தில் தொங்கவைத்துள்ளார் என்று யோபு சொல்லியிருக்கிறார். விண்வெளி ஆராய்ச்சியினால் அண்மையில் வெளியிடப்பட்ட படங்களும்.... சந்திரனிலிருந்து கொண்டு நாம் வாழும் கிரகத்தை எடுத்த படங்களும் இந்த மிகப் பழைய வேதாகமத் திருவசனத்தை மிக அழகாகவும் ஆச்சரியமாகவும் எடுத்துக்காட்டி விளக்குகின்றன. ஆனால் யோபு ஆகமத்தை எழுதிய ஆசிரியருக்கு இது எப்படித் தெரியும்? கடவுள் இத்தகைய விஞ்ஞான உண்மையை அந்த எழுத்தாளர் அதனை எழுதுவதற்கு முன்னர் அவருடைய மனத்திலே போட்டதினால் மட்டுமே அவருக்கு அது தெரியும். கடவுள் ஒரு திருவசனத்தில் இவ்வாறு செய்தார் என்றால், அவர் அருளிய மற்ற எல்லாத் திருவசனங்களிலும் அப்படியே செய்திருப்பார் அல்லவா? உண்மையிலே வேதாகமம் தனக்குத்தானே இத்தகைய பண்பை தெய்வீகப்பண்பு உள்ளமையை உண்மை என வலியுறுத்துகிறது. 'வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கின்றன' (II தீமோ 3 : 16).

ஒரு காலத்தில் பூமியை இராட்சச யானைகள், அல்லது முதலைகள், அல்லது இவை போன்றவை தங்கள்மீது தாங்கிக் கொண்டிருந்தன என்று மக்கள் எண்ணினார்கள். இத்தகைய தவறான கருத்துகள் மக்கள் பலருடைய மனத்திலிருந்த அதே காலத்தில், கடவுள் தமது திருநூலாகிய வேதாகமத்தை எழுதிய சில பக்தர்களின் மனத்தில் உலகத்தைப் பற்றிய உண்மைகளை வைத்தார் என்பதைத் தெளிவாய் அறிகிறோம்.

3. **ஒளியைப் பிரிக்கலாம்.** ஒளியைப் பிரிக்கலாம் அல்லது பகுக்கலாம் என்று இன்றைக்கு நமக்குத் தெரியும். (இதற்கு

முன்னர் எல்லாக் காலத்திலும் நாம் இதனை அறியோம்) நாம் ஒளியைப் பட்டகையின் மூலம் பிரிக்கிறோம். நண்பரே! நீங்கள் அவ்வாறு ஒளி பிரிக்கப்படுதலைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? ஆம்! மறுபடியும் அந்த மிகப் பழைய ஆகமத்தில் உள்ள இந்த வியப்புமிக்க செய்தியைக் கவனியுங்கள். 'வெளிச்சம் பகிர்ந்தளிக்கப்படும் இடத்திற்கு வழி யாது?' (யோபு 38 : 24 கத்தோலிக்க மொழியாக்கம்). இப்பொழுது ஒளியைப் பிரிப்பதற்கு நமக்கு ஒரு கருவி இருக்கிறது. ஆனால், இத்தகைய ஒரு காரியத்தைச் செய்து சாதிப்பதற்குக் கடவுள் தான் பின்பலமாய் இருக்கிறார். இயேசு உலகில் வாழ்ந்ததற்கு 1,000 ஆண்டுகளுக்கு முன்னால் யோபு என்பவர், விஞ்ஞான ஆராய்ச்சி நுணுக்கம் வாய்ந்த இந்தக் கேள்வியைக் கேட்டார். விஞ்ஞானயுகமல்லாத அவ்விருண்ட காலத்தில் – அவ்வளவு பழங்காலத்தில் யோபுவுக்கு அந்த எண்ணத்தை அருளியது யார்? கடவுளே அதனைச் செய்தவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

4. நண்பரே! நீங்கள் எப்பொழுதேனும் ஒரு கோளத்தைக் கையில் வைத்துக் கொண்டு அதனைச் சுற்றிச்சுற்றி உற்றுக் கவனித்த துண்டா? நீங்கள் அவ்வாறு செய்திருந்தால் அந்தக் கோளத்தில் காணப்பட்ட நீல நிறத்தைக் குறித்து, அதாவது கோளத்தின்மேல் காணப்பட்ட தண்ணீரைக் குறித்து ஒரு மிகச் சிறப்பான கருத்தை கவனித்திருப்பீர்கள். கடல்களெல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டு எல்லாம் ஒரே அடிப்பரப்பினை உடையன வாக உள்ளன. இப்பொழுது என்னுடன் இந்த வேத திருவசனங் களைப் படியுங்கள்; 'பின்பு தேவன்; வானத்தின் கீழே இருக்கிற தண்ணீர் ஒரிடத்தில் சேரவும் ..... கடவது என்றார் ...... சேர்ந்த தண்ணீருக்குச் சமுத்திரம் என்று பேரிட்டார்.' (ஆதி 1 : 9–10)

பூமியின் பெரிய சமுத்திரங்கள் எல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. எனவே இவையெல்லாம் உண்மையில் ஒரே சமுத்திரமாய் விளங்குகின்றன. மனிதர் பூமி முழுவதும் கடல் வழியாய்ச் சுற்றி வந்து இந்த உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு முன்னர் அல்லது விண்வெளியில் இருந்த நிலையில் படம் பிடித்துக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் வேதாகமம் இதனை வெளிப்படுத்திவிட்டது. அருமை நண்பரே! கடவுள் மட்டுமே மிகப்பழங்காலத்திலே இத்தகைய செய்திகளை வெளிப்படுத் தியிருக்க முடியும் என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம் இல்லையா? ஆனால், எல்லாம் இவை மட்டுமே அல்ல.

நிறைவேற்றப்பட்ட தீர்க்கதரிசனங்கள் வேதாகமம் கடவுளின் திருவாக்கு என்பதை நிரூபிக்கின்றன.

வேதத்தில் எண்ணற்ற தீர்க்கதரிசனங்கள் உண்டு. அவற்றுள் சிலவற்றை மட்டுமே நாம் இங்கே ஆராயலாம்.

1. சென்னையை விட மிகப்பெரிய நகரம் ஒன்று முன் ஒருகாலத்தில் இருந்தது. அது பாபிலோன் என்று அழைக்கப் பட்டது. பாபிலோன், நாட்டின் தலைநகராய் முன்னேறிக் கொண்டிருந்தபோது கடவுளுடைய தீர்க்கதரிசி ஒருவர் அதன் அழிவைப்பற்றி மிகத் தைரியமாய்த் தீர்க்கதரிசனம் சொன்னார். படியுங்கள் : 'ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும். இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை. தலைமுறைதோறும் அதில் ஒருவரும் தங்கிதரிப்பதுமில்லை; அங்கே அரபியன் கூடாரம் போடுவதுமில்லை; அங்கே மேய்ப்பர் மந்தையை

மறிப்பதுமில்லை. (ஏசாயா 13 : 19,20). இன்றைக்கு நாம் இந்த நகரத்தின் அழிந்த பகுதிகளை கூடப் பார்க்க முடியாது. அது இடிந்த கூளங்களின் ஒரு பெரிய மண்மேடாய் இருக்கிறது. புதை பொருளாராய்ச்சியாளர்களின் மண்வெட்டி அந்த நகரத்தின் பழைய மேன்மையை அதிகமாய் நாளும் கண்டுபிடித்து வருகிறது. அப்பொழுது, அது எப்படி நடக்கும் என்று தோன்றியது. இப்பொழுது அது நடந்த உண்மையாய்க் காணப்படுகிறது! இத்தகைய ஒரு தீர்க்கதரிசன அழிவைக் கடவுள் தான் முன்னறிவித்து இருக்க முடியும்.

2. பெரிய நாடாகிய எகிப்தை எண்ணிப் பார்க்கலாம். ஒரு காலத்தில் அது உலகத்தின் முதன்மை வாய்ந்த நாடாய் இருந்தது. அதனுடைய வல்லமையின் உச்சநிலைக் காலத்திலே எசேக்கியேல் தீர்க்கதரிசி அது குறிப்பிட்ட ஒரு எதிர்காலத்திலே வலிமை குன்றிய நாடாக விளங்கும் என்று தைரியமாய்த் தீர்க்கதரிசனம் உரைத்தார். வேதம் கூறுவதைக் கேளுங்கள் : 'எகிப்தியரின் சிறையிருப்பைத் திருப்பி, அவர்களை அவர்களுடைய ஜநநதேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பி வரப் பண்ணுவேன்; அங்கே அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள். அது இனி ஜாதிகளின்மேல் தன்னை உயர்த்தாமல், மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும்; அவர்கள் இனி ஜாதிகளை ஆளாதபடிக்கு அவர்களைக் குறுகிப்போகப் பண்ணுவேன்.' (எசேக்கியேல் 29 : 14,15). இன்றைக்கு இந்த நாட்டின் வல்லமை என்ன? கடவுளின் திருவாக்கு வெளிப்படுத்திய சத்தியத்துக்குத் தக்க சாட்சியாய்ப் பல நூற்றாண்டுகளாய் இந்த நாடு வலிமை குன்றிய நாடாய் இருந்து வருகிறது.

3. பல நூறு வருடங்களாய் நினிவே என்னும் பழைய நகரம் இருந்த இடம் கூடத் தெரியாமல் இருந்தது. கிழக்கத்திய நகரங்களுக்

குள்ளே பெரிய நகரமாய் இருந்த நினிவே பூமியின்மீது காணப்படாமல் மறைந்து விட்டது. இந்த நகரத்தைப்பற்றி வேதாகமம் கூறும் செய்தியும் வெறும் கட்டுக்கதையோ என்று கூடச் சிலர் சந்தேகித்தனர். பிறகு, 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த மிகப்பெரிய நகரத்தின் அழிந்த பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், வேதாகமம் இதனை நெடுங்காலத்துக்கு முன்னரே தீர்க்கதரிசனமாய் அறிவித்தது. துணிவுள்ள நாகூம் தீர்க்கதரிசி, "நினிவே பாழாய்ப் போயிற்று' என்று கூறினார். அப்பொழுது உன்னைக் காண்கிறவனெல்லாம் நினிவே பாழாய்ப் போயிற்று, அதற்காகப் புலம்புகிறவர் யார்? ஆறுதல் சொல்லுகிறவர்களை உனக்கு எங்கே தேடுவேனென்று சொல்லி, உன்னை விட்டோடிப் போவான். நீயும் வெறிகொண்டு ஒளித்துக் கொள்வாய்; நீயும் உன் சத்துருவுக்குத் தப்ப அரணான கோட்டையைத் தேடுவாய். (நாகூம் 3 : 7,11).

4. இறுதியாக நாம் எருசலேமைக் குறித்தத் தீர்க்கதரிசனத்தைக் காணலாம். நாம் இதனை இறுதியாகக் குறிப்பிடுவதனால் எல்லாத் தீர்க்கதரிசனங்களையும் சொல்லிவிட்டு இறுதியாக இதனைச் சொல்லுகிறோம் என்பது பொருளன்று. எருசலேமின் தீர்க்கதரிசனம் இன்றைக்கும் நிறைவடைந்து வருகிறது. 'புறவினத்தாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறவினத்தாரால் மிதிக்கப்படும்.' (லூக் 21 : 24). அகிலவுலக ரீதியில் எருசலேம் இன்றைக்கு வாணிபத்திற்கும், அரசியல் கவனத்திற்கும் ஆர்வத்திற்கும் மையமானதாய் விளங்குகிறது. இன்றைக்கு நாம் அதனை 'மிதியுண்ட' நகரம் என்று கொஞ்சங்கூட சொல்லமுடியாது. புறவினத்தாருக்கு நற்செய்தியை பிரசங்கிக்கும் காலம் மிக விரைவாக அதன் நிறைவேற்றத்தை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது. நமது ஆண்டவர் பரலோகத்திலிருந்து வெளிப்படும்

காலத்துக்கு மிக அண்மையில் நாம் வந்திருக்கிறோம். கடவுளுடைய திருவாக்கின் சத்தியம் நமது கண்களுக்கு முன்னால் நிறைவடைவதை நம்மால் கண்கூடாகக் காணமுடிகிறது.

இந்தக் கருத்துகளுடன் நீங்கள் உடன்படுகிறீர்கள் என்பதை நான் திட்டமாக அறிவேன். நிறைவேற்றப்பட்டுள்ள இந்த தீர்க்க தரிசனங்கள் ஒவ்வொன்றையும் நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, 'கடவுளால் மட்டுமே இத்தகைய செய்திகளை முன்னறிவிக்க முடியும்' என்பதை நாம் உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்!

கடவுள் அன்பாயிருப்பதனால் அவருடைய திருவாக்கு நமது இதயத்தைச் சேருகிறது. நாம் இதனை எதிர்பார்க்க வேண்டும் அல்லவா? அதாவது நம்மில் அன்புசெய்கிற கடவுள் ஒரு புத்தகத்தின் வாயிலாக நம்முடன் பேசுகிறார்; அவர் நம்முடன் பேசும் சொற்கள் அன்பு நிறைந்த சொற்களாக இருக்க வேண்டும் என்று நாம் இயல்பாக எதிர்பார்ப்போம். நாம் வேதாகமத்தைக் கவனமாகவும், அதனை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என்னும் ஆர்வத்துடனும் படிப்போமானால் இந்த வார்த்தைகள் நமது வாழ்க்கைக்கு மிக மிக உண்மையுள்ளவைகளாக இருப்பதைக் கண்டடையலாம். "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் (இதன் பொருள் உயிருள்ளது என்பது) வல்லமையும் (கடவுளின் உள்ளம் இதற்கு பின் பலமாக அமைந்துள்ளது) உள்ளதாயும், இரு புறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்குள்ளதாயும் (ஏன் என்றால் வேறு எந்தப்பட்டயமும் செய்யாததை இந்தப் பட்டயம் செய்கிறது) ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." (எபி 4 : 12). அதாவது அவன் ஆத்துமா அல்லது ஆவியிலிருந்து உள்ளத்தின் அடியுணர்வுத் தளத்திலிருந்து அவன் ஆத்துமாவை அல்லது

தன்னுணர்வுடைமையைப் பிரிக்கிறது. நமது தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியுடனும் அல்லது நம்முடைய 'ஆத்துமாவின் வாழ்க்கையுடன்,' கடவுள் திருவாக்கு பேசுகிறது; இவ்வாறு பேசி மனிதனுடைய வாழ்க்கையின் ஆழ்ந்த உட்பகுதியை அடைந்து கடவுள் அவனைக் காண்பதுபோல அவனே அவனைக் காணுமாறு செய்கிறது.

வேதாகமத்தால் மட்டுமே, மனிதனை, நிலையான நன்மையை நோக்கி உண்மையாக, ஆழமாக, மிக உள்ளார்ந்த நிலையில், நிரந்தரமாக மாற்றமுடியும். அதனுடைய தோற்ற மூலத்தைக் காட்டுவதற்கு இது ஒன்று மட்டுமே போதுமானதாக இருக்க வேண்டும். வேதாகமம் நமது இதயங்களுடன் பேசி, நம்மை நிலையான நன்மைக்காக மாற்றுகிறது என்னும் உண்மையானது, அது ஒரு தெய்வீகத் திருநூல் என்பதைக் காட்டுகிறது.

'வேதாகமம் கடவுளின் திருவாக்கு என்று நீங்கள் நம்புகிறீர்கள் அல்லவா?' ஆம். ஆனால், வேதாகமம் உண்மையானது என்று நம்புவது மட்டும் நமக்குப்போதாது. 'வேதாகமத்தில் உங்களுக்கும் எனக்கும் கடவுளுடைய சித்தம் என்ன என்பது அடங்கியிருக்கிறது' என்பதையும் நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

வேதாகமத்தில் உங்களுக்கும் எனக்கும் கடவுளின் சித்தம் அடங்கியிருக்கிறது!

வேதாகமமானது தனக்கு நிகர் இல்லாததும், ஒத்த இணையற்றதுமான தனி ஒன்றான பண்புடைய திருநூல். அது, நீங்கள் உங்களுக்குச் சொந்தமாக வைத்துக்கொண்டுள்ள புத்தகங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக நின்று உங்கள் வாழ்க்கைக்குக் கடவுள் அருளிய செய்தியாக உரிமை பாராட்டுகிறது. உங்களுடைய வாழ்க்கைக்குரிய கடவுளுடைய போதனைகளை உங்களுக்கு வெளிப்படுத்துவதாக உள்ளது.

வேதாகமத்தில் இப்பொழுது நம் வாழ்க்கைக்குரிய வழிமுறைகளும், கடந்தகால நிகழ்ச்சிகளும் உண்மையாய் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாய் இருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாய் இருக்கிறது.

கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தை மகிழ்விக்கின்றனவுமாயிருக்கின்றன; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவாக்குகிறதுமாயிருக்கிறது." (சங்கீதம் 19 : 7–8)

அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு: பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். (II பேதுரு 1 : 19)

அன்பார்ந்த நண்பரே, நாளைக்குத் தபால்காரர் உங்கள் பெயருக்கு வந்துள்ள ஒரு நீளமான கடிதத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம், அது எங்கிருந்து வந்தது என்று நீங்கள் ஆர்வத்துடன் பார்த்தபோது, அதில்

'இராஷ்டிரபதி பவன்,
குடியரசுத் தலைவர் அலுவலகம், புது டில்லி'

என்று இருக்கக் கண்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தச்

சொற்கள் உள்ளபடியே உங்களுக்கு எதிர்பாராத அதிர்ச்சியைக்கொடுக்கும். 'இராஷ்டிரபதி பவன், குடியரசுத் தலைவர் அலுவலகம்' இதன் பொருள் என்ன? இது தவறான ஆளிடம் கொடுக்கப்பட்டுவிட்டது என்று நீங்கள் உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ளுவீர்கள். நீங்கள் மறுபடியும் அந்தக் கடிதத்தைப் பார்த்தபோது அதில் உங்கள் பெயர் நன்றாக அச்செழுத்தில் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டீர்கள்.

திடுக்கிடத்தக்க உணர்ச்சியுடன் நடுக்கங் கொண்டு உறையின் ஓரத்தைக் கிழித்து, அதனுள்ளே மடித்து வைக்கப்பட்டிருந்த கடிதத்தைத் திறந்து படித்தபோது, இந்தியக் குடியரசுத் தலைவர் தாமே உங்களுக்கென ஒரு கடிதம் எழுதியிருப்பதைத் திட்டமாய் அறிந்து கொண்டீர்கள். அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது? அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது நம்முடைய கருத்துக்கு முக்கியமானது அன்று. ஆனால், இந்தியக் குடியரசுத் தலைவர் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் என்னும் உண்மையானது அக்கடிதத்தின் ஒவ்வொரு சொல்லையும் உங்களைத் திரும்பத்திரும்பப் படிக்கத் தூண்டுகிறது.

இதை, அதிகப்படுத்திப் பேசுவதாகச் சிலர் சொல்லலாம். ஆனால் அடுத்து சொல்லப் போகிற சொற்கள் கற்பனை செய்து சொல்வனவுமல்ல; அதிகப்படுத்திச் சொல்வனவுமல்ல. வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லா அதிகாரத்துக்கும் மேலான அதிகாரத்திலிருந்து உங்களுக்குச் சொந்தமான ஒரு செய்தியை நீங்கள் உங்கள் கையில் பெற்றிருக்கின்றீர்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். எல்லாம் வல்ல கடவுள் உங்களுக்கு அனுப்பியுள்ள செய்தி பரிசுத்த வேதாகமத்தில் இருக்கிறது.

வேதாகமமானது உலகத்திலுள்ள மிக மேலான அதிகாரத்திலிருந்து வந்துள்ள ஒரு செய்திமட்டுமன்று, அது பரலோக தந்தை தமது பிள்ளைகளுக்கு அன்புடன் அருளிய கட்டளைகள் அடங்கியதாகவும் இருக்கிறது.

அன்பார்ந்த நண்பரே! நீங்கள் உங்கள் மனைவியை விட்டுப் பிரிந்து நீண்டகாலம் வெளியிடத்துக்குப் போயிருந்ததுண்டா? நீங்கள் சில வாரங்கள் தூரமான ஓர் இடத்திற்குப் போயிருந்ததாக வைத்துக் கொள்ளுவோம். அத்தகைய சமயத்தில் உங்கள் அன்பான துணைவியிடம் இருந்து வரும் கடிதங்களுக்காக நீங்கள் மிகுந்த ஆவலுடன் காத்திருப்பீர்கள் அல்லவா? இப்பொழுது நீங்கள் வீடு திரும்பினீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் வீடு வந்ததும் உங்கள் மனைவி ஆவலுடன் உங்கள் பெட்டியைத் திறந்து பார்த்தாள்; அவ்வாறு பார்த்தபோது அவள் எழுதிய கடிதங்கள் எல்லாம் திறந்து படிக்கப்படாமல், அப்படியே இருந்ததை மிகுந்த வியப்புடன் கண்டுபிடித்தாள். உங்கள் மனைவி என்ன நினைப்பாள்? நண்பரே, இப்படித்தான் நமது பரம தந்தையாரும் அவருடைய திருக்குமாரரும் நமக்கு எழுதியுள்ள 'காதல் கடிதங்கள்' நிலையும் இருக்கிறது. அவைகள் திறந்து பார்க்கப்படாமலும், படிக்கப்படாமலும் நமது வீட்டில் இருக்கின்றனவா? தாவீது ஞானியார் சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள் : 'உமது வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது' (சங் 119 : 105).

பாவம் என்பது என்ன?

பாவம் என்பது –

1. செய்யக்கூடாது என்று சொன்னதைச் செய்வது.

2. செய்யுங்கள் என்று சொன்னதைச் செய்யாமலிருப்பது.

"பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்." (1 யோவான் 3 : 4).

"ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்." (யாக்கோபு 4 : 17)

வேதாகமத்தில் உங்களுக்கும் எனக்கும் கடவுளுடைய சித்தம் ன்ன என்பது எழுதப்பட்டுள்ளது என்றால், ஆம். அது அப்படியே ழுதப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். அவ்வாறு ிருக்கும்போது இயல்பாக வருகிற முடிவு என்னவென்றால்; கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்படியாமை எல்லாம் பாவம்' ஆகும் ன்பதே.

மக்கள் சாதாரணமாய் வாய்ப்பேச்சாகவும் ஏளனமாகவும்

ஒருவரைப் பாவி என்றழைப்பதையும் அல்லது 'ஓ அவன் எப்படிப்பட்ட பாவியாக மாறிவிட்டான்' என்றும் அடிக்கடி சொல்வதையும் நாம் கேள்விப்படுகிறோம். பாவம் என்பது என்ன? மெய்யாக வேதாகமத்தில் பாவம் என்பதற்குத் திட்டமான வரையறை கொடுக்கப்பட்டுள்ளது. இதோ அந்த வறையறை.

... நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1 யோவான் 3 :4). கடவுளுடைய பிரமாணம் எங்கே இருக்கிறது? வேதாகமத்தில் இருக்கிறது. ஆகையினால், எளிமையாக விளக்க வேண்டும் என்றால், பாவம் செய்தல் என்பது கடவுளுடைய திருவாக்காகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நித்தியமான பிரமாணங்களை மீறி நடத்தலாகும்.

ஆனால் ஆ, பாவம் என்பது எவ்வளவு பயங்கரமானது. நாம் தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்திருக்கிறோம் என்பதை அறிந்து உணர்தல் எவ்வளவு வருத்தம் தருகிற செய்தியாக இருக்கிறது. நீங்கள் நாட்டின் சட்டங்களை மீறினால் நீங்கள் நாட்டுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறீர்கள். நீங்கள் இந்திய நாட்டின் சட்டங்களை மீறினால் இந்தியக் குடியரசுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறீர்கள். ஆனால், என்றும் இருக்கிற கடவுளின் சட்டத்தை நீங்கள் மீறினால், நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். மனிதனுடைய அறிவுக்கு எட்டிய மிக மிக உயர்ந்த அதிகாரத்திற்கு விரோதமாகப் பாவம் செய்தீர்கள்.

நண்பரே! கெட்டகுமாரனுடைய வரலாறு உங்களுக்குத் தெரியுமா? இங்கே பாருங்கள்; கெட்ட குமாரனுடைய வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி இது.

'நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய், தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்... என்பேன்' (லூக்கா 15 : 18–19).

இந்த மகன் தன் தந்தையார் கொடுத்த எல்லாச் செல்வத்தையும் தவறான வழியில் செலவழித்துவிட்டான்; அவனுக்குப் பலவகையிலும் தேவை உண்டானது; தன் தேவைகளை நிறைவேற்ற வேலை தேடினான்; முடிவாக ஒரு குடியானவனின் பன்றிகளை மேய்க்கும் பணியில் சேர்ந்தான். ஆனால், ஒரு நாள், அவன் தன்னைத்தானே ஆராய்ந்து பார்த்தான்; தன் துன்ப நிலையை உணர்ந்தான். தான் செய்தது என்ன என்பதையும் உணர்ந்தறிந்தான். நாம் மேலே படித்த திருவசனம் அவனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட சொற்களே. அப்பொழுது அவனுக்குத் தவறு செய்யும் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியது என்ன என்பதும் தெரிந்தது. பாவம் கடவுளுக்கு விரோதமானது. பரலோகத்துக்கு விரோதமானது.

"பாவத்திற்குச் செய்தல், செய்யாதிருத்தல் ஆகிய இருவகைப் பண்புகளும் உண்டு. கீழ்ப்படியாமையில், நல்லதைச் செய்யத் தவறுவதும், அப்படியே எல்லோருக்கும் தெரியுமாறு தவறு செய்வதும் அடங்கும்." "பாவம் என்பது செய்யக் கூடாது என்று நமக்குச் சொன்னதை நாம் செய்தலும், செய்யவேண்டும் என்று நமக்குச் சொன்னதைச் செய்யாமலிருத்தலுமாகும்."

எல்லாருமே பாவம் செய்துள்ளனர்

நாம் எல்லாருமே அதே படகில்தான் இருக்கிறோம்
அது அமிழ்ந்து கொண்டிருக்கிறது!

எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள். (ரோமர் 3 : 23).

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53 : 5)

நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (ஏசாயா 53 : 6)

மனிதனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்கு சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்தப்பார்க்கிறார் (நீதிமொழிகள் 16 : 2)

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. (1 யோவான் 1 : 8)

அடுத்த சத்தியத்தை நீங்கள் கட்டாயம் ஒப்புக் கொள்வீர்கள் என்பதை நான் அறிவேன். அதாவது : எல்லாருமே பாவம் செய்துள்ளனர்! **'நாம் எல்லாரும் ஒரே படகில் தான் இருக்கிறோம்; அது முழுகிக் கொண்டிருக்கிறது!'** திருடுதல், பொருளாசை, பொய், குடிபோதை, கொலை, விக்கிரகாராதனை, விபசாரம், இச்சை, மோகம், இங்கே பட்டியலிட்டுச் சொல்லப்பட்டு உள்ள சொற்கள் நாம் எல்லாரும் செய்யும் குறிப்பிட்ட பாவங்களாகும். ஒரு வேளை இவற்றுள் ஒரு பாவத்தை மட்டும் நாம் செய்யாமல் இருக்கலாம்; ஆனால் நாம் வேறு ஒரு பாவத்தில் இருப்போம். கடவுள் தமது திருவாக்கில் பாவத்தைக் குறித்துக்காட்டுவதற்கு அவர் பயன்படுத்தும் சொற்கள் இவை. ரோமர் 3 : 23லுள்ள திருவசனத்தை நாம் படிக்கலாம் "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்."

இங்கே பாவம் செய்தது யார் என்று சொல்லப்பட்டுள்ளது? "எல்லாரும்." அதிலே யார் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்? "ஒவ்வொருவரும்." அதிலே நீங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம். அப்படி என்றால் நீங்கள் என்ன செய்தீர்கள்? "நான் பாவம் செய்திருக்கிறேன்."

ஏசாயா 53 : 5–6ன் அழகான பகுதியை இங்கே கவனியுங்கள். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்." நாம் எவ்வாறு பாவஞ் செய்திருக்கிறோம்? யார் பாவஞ் செய்தது என்பதைக் கவனியுங்கள். நாம் ஆடுகளைப் போலப் பாவஞ்செய்கிறோம். நம்முடைய அன்பான மேய்ப்பரிடம் இருந்து நாம் விலகிச்சென்று நமது சொந்த வழியில்

நடக்கிறோம். கடவுள் நமது தேவையைச் சந்திப்பதற்காக நமது பாவத்தை இயேசுவின்மேல் சுமத்தினார் என்பதை அறியும்போது நாம் உண்மையிலே மகிழ்ச்சி அடைகிறோம். நமக்கு ஒரு விடுதலை உண்டாகிறது.

நாம் ஒவ்வொருவரும் அவரவர் தவறுகளுக்கு விளக்கங்கூறி (சரியெனக்காட்டி) விடலாம். இந்தத் திருவசனம் எவ்வளவு உண்மையானது; 'மனிதனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்.' கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்; (நீதிமொழிகள் 16 : 2). கடவுள் நமது இதயங்களை நிறுத்துப் பார்க்கும்போது நாம் மிகக் குறைவாகக் காணப்படுவோம் என்பதையும் அறிவோம். நாம் கடவுளின் அளவுகளில் நிறுக்கப்படுவோம்; அப்பொழுது சரிசமநிலைக்கு நாம் குறைவுள்ளவர்களாகக் காணப்படுவோம்.

நாம் ஒரு போதும் பாவம் செய்யவில்லை என்று சொல்வோமானால், நம்மை நாமே வஞ்சிக்க முயற்சிக்கிறோம் என்பது பொருளாகும். நாம் கடவுளையோ, நமது நண்பர்களையோ வஞ்சிக்கவில்லை. கடவுள் கூறியுள்ளதும் இதுதான் (Iயோவான் 1:8).

"நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்; சத்தியம் நமக்குள் இராது."

பாவத்தின் சம்பளம் மரணம்

தண்டனை இல்லை என்றால் சட்டமும் இல்லை!

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். (ரோமர் 6 : 23)

பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதும் இல்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும். (எசேக்கியேல் 18 : 20)

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரகாரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். (வெளிப்படுத்தலாகமம் 21 : 8)

அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். (மத்தேயு 25 : 41)

கடவுளுடைய கட்டளையை மீறினால் தண்டனை உண்டு. தண்டனை இல்லாமல் அவருடைய கட்டளையை மீறமுடியாது. கவனியுங்கள். கடவுள் சொல்லுகிறார். 'பாவத்தின் சம்பளம் மரணம்!' இங்கே சொல்லப்பட்டுள்ள மரணம் சரீர மரணமன்று. 'பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்' (எசே 18 : 20).

அன்பார்ந்த நண்பரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி உள்ளான மனிதன் என்பதுதான் **ஆத்துமா:** மாமிசத்தாலான சரீரக் கூண்டுக்குள்ளே வாழ்கிற உண்மையான ஆள் ஆத்துமாவே. உங்களுடைய சரீரம் உங்களுடைய ஆத்துமாவின் கருவியே. ஆகையினாலே, நடத்தையின் பொறுப்பு சரீரத்திடம் இல்லை; ஆனால், ஆத்துமாவிடம் இருக்கிறது. எப்படி ஒருவரைக் கொலைசெய்த குற்றம் துப்பாக்கியையோ அல்லது அதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவியையோ சாராமல் கொலை செய்த மனிதனைச் சாருமோ அப்படிப்போல இதுவுமாகும். துப்பாக்கியைப் பயன்படுத்திய மனிதனையே கொலையின் பொறுப்பு சாரும். நாம் இந்த உதாரணத்தில் இன்னும் ஒரு படிமேலே சென்று சிந்திக்கலாம்.

கொலை குற்றம் அதனைச் செய்த மனிதனுடைய உடலின் பொறுப்பன்று; ஆனால் அந்த உடலைக் கொலை செய்வதற்குக் கருவியாகப் பயன்படுத்திய மனிதனுடைய ஆத்துமாவின் பொறுப்பு. எனவேதான், கடவுள் தக்க சாதனத்துக்கு – மனிதனுடைய ஆத்துமாவுக்கு விரோதமாகப் பாவத்தின் தண்டனையை விதித்தார். பாவஞ் செய்த மனிதனுடைய ஆத்துமாவுக்கு அல்லது ஆவிக்கு விரோதமான தண்டனை என்ன? கடவுளின் திருவாக்கு இப்பொருளைக் குறித்து என்ன சொல்லுகிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

'பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்'. (வெளி 21 : 8).

எல்லாரும் ஒருதடவை மரணமடைவார்கள்; ஆனால், கடவுளுக்கு விரோதமான தங்கள் பாவங்களுக்குரிய தண்டனையைச் செலுத்துபவர்கள், சரீரத்தின் முதல் மரணமடைவதுடன், இரண்டாம் மரணத்தையும் அடைவார்கள். இரண்டாம் மரணம் ஆத்துமாவின் மரணம். கடவுள் இந்த இரண்டாம் மரணத்தை 'அக்கினிக் கடல்' என்று அழைக்கிறார்.

இந்தப் பொருளைப் பற்றிய இயேசுவின் திருவாய் மொழிகளைக் கேளுங்கள்:

'அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.' (மத்தேயு 25 : 41).

"ஆனால், சிலர் 'இல்லை', என்னால் அதனை விளங்கிக் கொள்ள முடியவில்லை, நான் அதனை மெய்யாகவே நம்புகிறேனா இல்லையா என்று எனக்கு உறுதியாகத் தோன்றவில்லை" என்கிறார்கள். அவர்கள், 'ஒரு தகப்பன் தன் மகனை மன்னிக்கிறதுபோலக் கடவுள் ஏன் ஒரு மனிதனை மன்னிக்கக் கூடாது? என்ன இருந்தாலும் நாம் எல்லாரும் கடவுளுடைய பிள்ளைகள் அல்லவா? ஓர் உலகத் தகப்பனைப்போலக் கடவுளும் இரக்கமுள்ளவராகவும் அன்புள்ளவராகவும் இருந்து நாம் அவரிடம் மன்னிப்புக் கேட்கும்போது, அவர் ஏன் நமக்கு மன்னிக்கக்கூடாது' என்று வாதிடுகிறார்கள்.

நல்லது, அது ஒரு நல்ல கேள்விதான். அதற்கு ஒரு வேதாகம விடை சொல்லப்பட வேண்டும். கடவுள் ஒரு பிரமாணத்தைச் (சட்டத்தை) செய்திருக்கும்போது, அதனை மீறினால் அதற்குத் தண்டனை விதிக்காமல் இருப்பாரானால் அதனால் என்ன நன்மை உண்டு? ஆனால், கடவுள் ஒரு தண்டனை விதித்துள்ளார். அவர் பாவத்துக்குக் கொடுத்துள்ள ஒரே தண்டனை நரகம் என்று சொல்லுகிறார். பாவத்துக்குத் தண்டனை அல்லது பாவத்தின்

விளைவு அக்கினிக் கடல் என்று கடவுள் சொல்லுகிறார். அந்தப் பயங்கரமான விளைவை யார் அனுபவிப்பார்கள்? பாவம் செய்கிறவர்கள். யார் பாவம் செய்தது? முழு உலகமும். ஆம் யோவான் எழுதியது போல, 'உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.' (யோவான் 5 : 19). பவுல் உறுதி செய்ததுபோல, 'உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவானவர்கள்.' (ரோமர் 3 : 9). நமக்கு இங்கே சொல்லப்பட்டுள்ளது போல 'தண்டனை இல்லை என்றால் சட்டமும் இல்லை!'

அந்த ஒரே காரணந்தான் நாங்கள் ஆத்துமாக்களுடன் பேசுவதற்கு எங்களை இவ்வளவாகத் தூண்டுவது; ஏன் என்றால், கடவுள் வெளிப்படுத்தியுள்ளதை நாங்கள் அப்படியே நம்புகிறோம். எல்லா மனிதர்களின் பாவத்துக்கும் ஒரே விளைவு நித்திய காலமாக நரகத்திற்குப் போவதாகும்; பாவம் செய்த ஆத்துமாவே அந்த நித்திய நரகத்திற்குப் போகும். கடவுள் அந்த நிலையில்தான் உலகத்தைக் காண்கிறார்; அவர்கள் அவருக்கும் அவரது பிரமாணத்துக்கும் விரோதமாய்க் கீழ்ப்படியாமற்போன போதும் அவர் அவர்களில் அன்பு கூருகிறார். அவர்களுக்கு மன்னிப்பு அருள அவர் மிகவும் விரும்புகிறார். அவர் இதற்கு ஒரு வழி காணத்தேடினார்; அது அவருடைய ஒரே பேறான குமாரனை உலகத்துக்கு அனுப்புவதில் காணப்பட்டது.

அன்பார்ந்த நண்பரே! யோவான் 3 : 16 என்ன சொல்லுகிறது என்று உங்களுக்குத்தெரியும் என்று நினைக்கிறேன்.

> 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'.(யோவான் 3:16).

கடவுள் ஏன் உலகத்தைக் குறித்து அக்கரை உள்ளவராய் இருக்கிறார்? ஏன் ஏன்றால், உலகம் அதன் பாவத்தினால் அழிந்து கொண்டிருந்தது.

இயேசு மனித உடலில் கடவுள்

கடவுள் தம் திருமைந்தரை உலகத்திற்கு அனுப்பியபோது அவருக்கு ஒரு பெயர் வழங்கப்பட்டது. அவருடைய பிறப்பை அறிவித்த தூதர்கள்; 'அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்..... இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்?' என்றனர். இயேசு இந்த உலகத்துக்கு வந்ததனால் உண்மையிலேயே 'தேவன் நம்மோடிருக்கிறார்' .... 'கடவுள் மனித உடலில்'இருந்தார்.

இப்பொழுதே நாம் சொல்லும் இக் கருத்துக்கும் நாம் இதுகாறும் படித்து வந்ததற்கும் உள்ள தெளிவான தொடர்பை உங்களால் காணமுடியாமலிருக்கலாம்; ஆனால் வெகு சீக்கிரத்தில் நீங்கள் அதைக் காண்பீர்கள்.



நன்றாகக் கவனியுங்கள்; ஏசாயா இந்தக் குழந்தையின் பிறப்பைத் தீர்க்தரிசனமாய் அறிவித்தார். அவர் என்ன சொன்னார் என்பதைப் பாருங்கள்.

'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியப்பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.' ஏசாயா 9 : 6.

இந்தச் சொற்களின் பொருளை நீங்கள் கவனித்தீர்களா? ஒரு குழந்தை பிறந்த அதே நேரத்தில் 'ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.' பெத்லகேமில் பிறந்த குழந்தை கடவுளுடைய திருமைந்தர். அவரைக் குறித்து யோவான் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.' யோவான் 1 : 1.

வார்த்தை, என்று அழைக்கப்படுகிற இவருக்கு என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள்:

'அந்த வார்த்தை மாமிசமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.' யோவான் 1 : 14.

யார் மாமிசமானது? கடவுளுடைய வல்லமை வாய்ந்த திருமைந்தர். அவர் ஆதியிலே கடவுளோடு இருந்தவர்; கடவுளாய் இருந்தவர். இப்பொழுது நசரேயனாகிய இயேசு கடவுளுடைய திருமைந்தர் என்பதற்கான சான்று அல்லது ஆதாரம் அவரது பின்வரும் தெய்வப் பண்புகளால் புலனாகிறது;

வியாதிமீது வல்லமை

இயேசு நோயாளிகளைச் சுகமாக்கினார்; மரித்தோரை எழுப்பினார்; தொழுநோயாளிகளைக் குணப்படுத்தினார். இங்கே கவனியுங்கள்.

'இயேசு ஜனங்களுக்கு...... உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்த மாக்கினார்' மத் 4 : 23.

ஆனால், அவர் ஏன் இவற்றைச் செய்தார்? துன்பங்களை நீக்கவா? ஆம், அதனினும் இன்னும் பெரிய நோக்கத்தை உள்ளத்தில் கொண்டவராய்... அவர் உண்மையிலே 'மனித உடலில் கடவுள்' என்று மக்கள் நம்புவதற்கான காரணம் உண்டாவதற்கு ஏதுவாக இவற்றைச் செய்தார். நமது கருத்தைக் கவரும் அவரது அற்புதங்களின் இன்னொரு படம் இங்கே இருக்கிறது.



படைப்பு வல்லமை

"சாயங்காலமாகிறபோது, பன்னிருவரும் சேர்ந்துவந்து, அவரை நோக்கி: நாம் இருக்கிற இடம் வனாந்தரமாயிருக்கிறது. சுற்றியிருக்கிற ஊர்களிலும் கிராமங்களிலும் மக்கள் போய்த் தங்கி, போஜனபதார்த்தங்களைச் சம்பாதித்துக் கொள்ளும்படி அவர்களை அனுப்பி விட வேண்டும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி : நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: எங்களிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமாத்திரமுண்டு, இந்த மக்களெல்லாருக்கும் போஜனங்கொடுக்க வேண்டியதானால், நாங்கள் போய் வாங்கிக் கொண்டு வரவேண்டுமே என்றார்கள். ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தார்கள். அவர்களைப் பந்திக்கு ஐம்பது ஐம்பது பேராக உட்காரும்படி சொல்லுங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார். அவர்கள் அந்தப்படியே எல்லாரையும் உட்காரும்படி செய்தார்கள். அப்பொழுது அவர் அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்து, பிட்டு, மக்கள் முன்வைக்கும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகள் பன்னிரண்டு கூடை நிறைய எடுக்கப்பட்டது." (லூக்கா 9 : 12-17).

இயேசுவானவர் ஒரு சிறு பையனின் உணவான ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து அவற்றை ஆசீர்வதித்து, ஐயாயிரம் பேருக்கு வேண்டிய உணவை அவற்றைக் கொண்டு உண்டாக்கினார். இந்த வரலாறு லூக்காவில் எழுதப்பட்டுள்ளது. பிதாவானவர், இயேசுவின் மூலம், ஆதியிலே உலகத்தை உண்டாக்கியதுபோல இங்கே இயேசுபெருமான் அப்பங்களையும் மீன் களையும் தமது வல்லமையினால் உண்டாக்கினார்.

இயேசு மெய்யாகவே கடவுளுடைய திருமகன் என்று நாம் நம்புவதற்காக அவர் இந்த வல்லமையான செயல்களையும் அற்புதங் களையும் அடையாளங் களையும் செய்தருளினார். ஆனால், அவர் உலகத்திற்கு வந்ததன் உண்மையான நோக்கம் மக்களுடைய பாவத்தின் சம்பளத்தைச் செலுத்துவதாகும்.



அவர் பாவத்தின் சம்பளத்தைச் செலுத்தினார்

சத்தியம் 7



அவர்

பாவத்தின்

சம்பளத்தைச்

செலுத்தினார்

"ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." (I பேதுரு 3 : 18)

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." (I பேதுரு 2 : 24)

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்". (II கொரிந்தியர் 5 : 21)

"அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார், இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப் படுவது அதிக நிச்சயமாமே. (ரோமர் 5 :6–9).

ஒருவருக்கு யோவான், யாக்கோபு என்னும் பெயர் கொண்ட இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர், அவர்களைத் தன் சொந்த ஆத்துமாவைப் போல நேசித்தார். அந்த இரண்டு பையன்களும் அவர்களுடைய தந்தையாரின் வீட்டிலே வளர்ந்து வந்த காலத்தில்

இருவரும் இரண்டு வேறு ஒழுக்கத்தை உடையவர்களாய் வளர்ந்தனர். அவர்கள் வெகு விரைவில் தொடக்கப் பள்ளியைக் கடந்து உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றனர். தந்தையார் தமது பிள்ளைகள் இருவரும் வாழ்க்கையில் எல்லா வாய்ப்புகளையும் பெறவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்தில் வாழ்க்கையில் மிகுந்த தியாகம் செய்து அவர்களைக் கல்லூரிக்கு அனுப்பினார்.

இருவரும் சட்டக் கல்வி கற்றனர். ஆனால் யோவான் எப்படியோ தீய நண்பர்கள் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு குடிக்கத் தொடங்கினான். அவன் ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான். எல்லாரும் அவனை ஒரு குடிகாரன் என்று சொல்லலானார்கள். அவன் ஊரைவிட்டு ஓடிவிட்டான். பிறகு அவனைப் பற்றி ஒரு செய்தியும் கிட்டவில்லை. இது அவன் தந்தையாருக்கு மிகுந்த இதய வேதனையைக் கொடுத்தது.

யாக்கோபு சட்டக் கல்லூரியில் படித்துத் தேறி ஒரு சிறந்த வழக்கறிஞரானான். சில ஆண்டுகளுக்குள் அவன் பதவி உயர்வுபெற்று நீதிபதியானான். அவன் நீதிபதியான சில மாதங்களுக்குள் நீதிமன்றத்தில் மிகுந்த வருந்தத்தக்க ஓர் உருவத்தை ஒரு நாள் காண வேண்டியதாயிற்று. அது ஒரு பயங்கரமான குடிகாரனுடைய உருவம்; பரட்டைத்தலை, குடிபோதையில் இரத்தச் சிவப்பான கண்கள், மழிக்கப்படாத முகம், அவனுடைய ஆடை அழுக்கேறியும் கசங்கியும் இருந்தது. இரண்டு அதிகாரிகள் இருபக்கத்திலும் அவனை அமுக்கிப் பிடித்துக்கொண்டிருக்க அவன் கவிழ்ந்த தலையுடன் நீதிபதிக்கு முன்னல் நின்றான். குற்றத்தை விசாரிப்பதற்காக நீதிபதி குற்றவாளியை அழைத்தார். குற்றவாளி தலை நிமிர்ந்து பார்த்தபோது, அவ்வாறு அவன் பார்த்துக்கொண்டு இருக்கையில் நீதிபதியின் உடலிலே திடீரென ஒரு குளிர்ந்த உணர்ச்சி ஊடுருவிச் சென்றது. ஆம், அங்கே எதிரில் தன் எல்லாக் குப்பையும் பாவமும்

நிறைந்தவனாய் நிற்பவன் வேறு யாரும் இல்லை. நீதிபதியின் சொந்தச் சகோதரன் நீதிபதி அவன் பெயரைக் கேட்டார்; அவன் தாழ்ந்த கரகரத்து குரலில் தன் பெயரை முணங்கினான். பிறகு நீதிபதி அவன் பெயரை வெளிப்படையாய் 'யோவான்' என்று சொல்லி அழைத்தார். அந்தப் பரிதாபத்திற்குரிய உருவம் தன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் திகைப்படைந்தது. தலைநிமிர்ந்து பார்த்தபோது..... அதன் பிறகு நம்ப முடியாத அதிர்ச்சி கலந்த ஒரு பார்வை அவன் முகத்தின் குறுக்கே ஓடியது. 'யாக்கோபு' என்று அவன் திக்கித் திக்கி, 'என் சொந்தச் சகோதரன்' என்று சொன்னான். யாக்கோபு 'ஆம் அவன்தான்' என்றார். மேலும், தொடர்ந்து, 'நீ எங்கே போயிருந்தாய், நீ என்ன செய்தாய்?' என்று கேட்டார் நீதிபதி. 'அதுதான் வெளிப்படையாய்த் தோன்றுகிறதே' என்று யோவான் வெட்கம் நிறைந்தவனாய்ச் சொன்னான். யாக்கோபு தன் உணர்ச்சியை அடக்கிக் கொள்வதற்காகச் சற்று நேரம் அப்புறம் பார்த்துவிட்டு கேட்டார் : 'யோவான் நீ ஏன் இங்கே வந்தாய், நீ என்ன செய்தாய்?' யோவான் தரையைப் பார்த்துக் கொண்டே இருந்தான். நீதிபதி தனக்கு முன்னால் இருந்த புத்தகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, 'நீ மூன்று அல்லது நான்கு குற்றங்களில் பிடிக்கப்பட்டிருக்கிறதாய் இங்கே எழுதப்பட்டிருக்கிறது,' என்று கூறி 'அது சரியா', யோவான்? நீ குற்றவாளியா, யோவான்? என்று கேட்டார். 'ஆம், நான் குற்றவாளிதான் என்று நினைக்கிறேன், யாக்கோபு' என்று வருத்தம் தோய்ந்த குரலில் பதில் வந்தது.

நீதிபதி தீர்ப்பு வழங்கவேண்டிய வேளை நெருங்கியதால் நீதிமன்றத்தில் ஒரு நீண்ட அமைதி நிலவியது. தன் அன்பார்ந்த சகோதரன் காரியத்தில் இந்த நீதிபதி என்ன செய்யப் போகிறார்? யாக்கோபு உறுதியான கனத்த குரலில், 'யோவான் உன்னைக் குற்றவாளியாய்க் காண்கிறேன்; சட்டம் அனுமதிக்கும் அதிக அளவு அபராதத்தை நான் உனக்குத் தண்டனையாக விதிக்கிறேன்' என்று தீர்ப்பு வழங்கினார்.

அபராதம் விதிக்கப்படும்போது நீதிமன்றத்தில் இருந்த எல்லாரும் பெருமூச்சு விட்டனர். தண்டனை அறிவிக்கும் சொற்களின் சத்தம் காற்றில் குறைவதற்கு முன்னரே, யாக்கோபு நீதிபதியின் ஆடைகளைக் களைந்துவிட்டு, தன் இடத்தினின்று கீழே இறங்கித் தன் உடன் பிறந்தான் பக்கத்தில் நின்றார். தன் சட்டைப் பையில் கையைப் போட்டு வேண்டிய பணத்தை எடுத்துத் தண்டனையாக விதிக்கப்பட்ட பெருந்தொகை முழுவதையும் செலுத்தினார்.

அன்பார்ந்த நண்பரே! கடவுள் உங்களுக்கும் எனக்கும் செய்துள்ளது இதுதான். அவர் பாவத்திற்காக ஒரு பெரிய தண்டனையை விதித்தார்; பிறகு, அவர் தமது திருமைந்தர் உருவில் வந்து நமக்காக அந்தத் தண்டனையைத் தாமே அனுபவித்துத் தீர்த்தார். அது அற்புதமாய் இல்லையா? இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்துகிற பின்வரும் திருவசனத்தைக் கவனியுங்கள்.

> ‘நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.’ (I பேதுரு 2 : 24).

இந்த மாபெரும் சத்தியம் வேதாகமம் முழுவதிலும் ஊடுருவிச் செல்லுகிறது. ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுவதைக் காது கொடுத்துக் கேளுங்கள்.

> ‘நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.’ (ஏசாயா 53 : 5–6).

(இந்தத் திருவசனத்தை நமக்குச் சொந்தமாக்கிப் படித்தால் பெரிதும் உதவியாக இருக்கும்) ‘நண்பரே’ உங்களுடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, உங்களுடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; உங்களுக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் விழுந்தது; அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமாகிறீர்கள். நாம் எல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித்திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.

அவர் கடவுளின் திருமைந்தர் ஆனதினால் அவரால் இதனைச் செய்ய முடிந்தது; அவர் முழு உலகத்தின் பாவத்துக்கும் பதிலாளியானார். அப்போஸ்தலனாகிய பவுல் அவரைக் குறித்து இவ்வாறு சொல்லுகிறார்.

> நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.’ II கொரி 5 : 21.

மறுபடியும் நண்பரே, இந்தத் திருவசனத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிப் பாருங்கள்:

‘நண்பரே, நீங்கள் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, பாவம் அறியாத அவரை உங்களுக்காகப் பாவமாக்கினார்.’ அது மகிமைபொருந்திய நற்செய்தி அல்லவா? அதனால்தான் இந்தச்செய்தி, ‘சுவிசேசம்’ என்றழைக்கப்படுகிறது. ‘சுவிசேசம்’ என்றால், ‘நற்செய்தி’ என்பது பொருள். ஏன் என்றால், கிறிஸ்து கடவுளுடைய திருமைந்தர். அவர் பாவத்தின் சம்பளத்தைச்

செலுத்தினார்; அவர் மூலமாகக் கடவுள் நம்முடைய மீறுதல்களை எல்லாம் மன்னிக்கக் கூடியவராக இருக்கிறார்.

"அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒரு வேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." (ரோமர் 5 : 6–9).

நாம் இதனை எவ்வளவாக நம்புகிறோமோ அவ்வளவாக அதற்குச் செவி கொடுக்க வேண்டும்.

"அப்படி என்றால் நான் எவ்வாறு செவிகொடுக்க வேண்டும்? நான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டும்?"

''நீங்கள் இரட்சிக்கப்படுவதற்குக் கட்டாயம் செய்யவேண்டியது சிறிது உண்டு'



பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7 : 21)

ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். (வெளி 22 : 14)

சிலுவையின் அருகில் நின்று அதனைப் பார்ப்பதும் அதன்மீது கிறிஸ்துவைக் காண்பதும் ஓர் அரிய பெரிய திருக்காட்சியாகும். மனிதக் கண்கள் இப்பிறப்பில் பெற்ற தலைமைப் பாக்கியம் இது. கிறிஸ்து சிலுவையின்மீது நமக்காகவும் உலகத்திற்காவும் என்ன செய்து முடித்தார் என்பதை அறிதல் வியப்பு நிறைந்த ஒரு செய்தியாகும். சிலுவையின்மீது கிறிஸ்து நமது இரட்சிப்பை விலை கொடுத்து வாங்கினார். ஆனால், 'மனிதன் இரட்சிக்கப்படுவதற்குக் கட்டாயம் செய்யவேண்டியது சிறிது உண்டு.' இந்தத் திருவசனத்தைக் கவனியுங்கள்.

> 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல் , என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." (மத்தேயு 7 : 21)

அவரைக் 'கர்த்தாவே' என்று அழைப்பதோ, அல்லது நமக்காக

அவர் மரித்தார் என்பதை ஒப்புக்கொள்வதோ போதாது. கட்டாயம் கிரியை இருக்க வேண்டும். அவர் நம் மீது பாராட்டிய அன்புக்கு மறுமொழியாக நாம் கட்டாயம் அந்த அன்புக்கு ஆட்பட்டே யாகவேண்டும்.

நாம் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது நமக்கு நித்தியவாழ்வைச் சம்பாதித்துக் கொடுக்கப் போவது இல்லை. நித்திய வாழ்வு ஓர் அன்பளிப்பு என்றாலும், நாம் இந்தக் கட்டளைகள் என்ன என்பதைக் கண்டறிந்து அவற்றிற்குக் கட்டாயம் கீழ்ப்படிந்து வாழவேண்டும். வெளிப்படுத்தலாகமத்தில் உள்ள இத்திருவசனத்தைக் கவனியுங்கள்.

> "ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்." (வெளி 22 : 14)

அவருடைய சித்தம் என்ன?
அவருடைய கட்டளைகள் யாவை?

இதோ முதலாம் கட்டளை....

விசுவாசிக்க வேண்டும்

'விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.' (எபிரெயர் 11 : 6).

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். (எபிரெயர் 11 : 6)

இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5 : 1)

இயேசு நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார். (யோவான் 8 : 24)

இயேசு உயிருள்ள கடவுளின்

திருக்குமாரர் என்று நீங்கள்

விசுவாசிக்கிறீர்களா?

மறுபடியும் கவனியுங்கள்:

'இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான் களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.' (ரோமர் 5 : 1).

கர்த்தர், இதனை நமது விருப்பத்திற்கு விடவில்லை என்பதைத் தெளிவாய்க் காட்டியுள்ளார். அவர் :

'ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.' (யோவான் 8 : 24)

அன்பார்ந்த நண்பரே! நீங்கள் இயேசு உயிருள்ள கடவுளுடைய திருமகனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்கிறீர்களா? நமது கர்த்தர் மேலும் சொல்லுகிறார்.

மனந்திரும்ப வேண்டும்.

மனந்திரும்ப வேண்டும்.

அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்; (அப் 17 : 30).

மனந்திரும்புங்கள்



விசவாசம் மனந்திரும்புதல்

30. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

31.மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார். (அப் 17 : 30,31)

9. தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (II பேதுரு 3 : 9)

17. அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன் : என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்.

18. நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்; தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். (லூக்கா 15 : 17,18)

உங்கள் வாழ்க்கையிலே உங்களுக்குத் தெரிந்திருக்கின்ற பாவங்களிலிருந்து நீங்கள் மனந்திரும்புங்கள்......
மனந்திரும்பமாட்டீர்களா?

மனந்திரும்புதல் என்பது உங்களுடைய பாவங்களை விட்டு விலகத்தக்க அளவுக்கு நீங்கள் துக்கப்படுவதாகும் என்று ஒருவர் மிகப்பொருத்தமாகக் கூறியுள்ளார். இயேசுவின் திருவாய் மொழிகளைக் கவனியுங்கள்.

"அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்." (லூக் 13 : 3).

நமது தலைவருடைய தெளிவான திருவாய்மொழிகளால் மனந்திரும்புதல் எவ்வளவு இன்றியமையாதது என்பதை இப்பொழுது தெளிவாகக் காணலாம். மனந்திரும்புதல் இல்லாமல் வாழ்வின் நம்பிக்கையே இல்லை. அப்படி என்றால், மனந்திரும்புதல் என்பதன் பொருள் என்ன? இந்தச் சொல்லே அது மனத்தின் ஒரு மாற்றம் என்பதை நமக்குப் புலப்படுத்துகிறது. இந்த மனமாற்றம் பாவத்தைப் பற்றியது. கடவுளை நோக்கியது. ஆகையினாலே, மனந்திரும்புதல் என்பது பாவத்தினிமித்தம் கடவுளுக்கு ஏற்ற துக்கமடைந்து, அதன் விளைவாக ஒழுக்கத்திலே ஒரு முழுமாற்றம் உண்டாவதாகும். கடவுள் மெய்யாகவே நமக்கு நல்லவராக இருக்கிறார்.

இதைச் சிந்தித்துப் பாருங்கள் :

கடவுள் நீண்ட பொறுமையுள்ளவராயும் இருக்கிறார்; அவர் நம்மைக் காண்பதுபோல நாமே நம்மைக் கண்டு, உணர்ந்து உண்மையான மனந்திரும்புதலின்மூலம் நாம் அவரிடத்துக்குத் திரும்ப வேண்டும் என்பதற்காக அவர் நம்மிடம் நீண்ட பொறுமையுள்ளவராய்க் காத்திருக்கிறார். அருமை நண்பரே! நாம் இதை எல்லாம் எண்ணிப்பார்க்கும்போது நாம் நமது பாவத்துடன் என்ன செய்யப்போகிறோம், நாம் அவற்றிலிருந்து மனந்திரும்ப வேண்டியதுதானே? நாம் நமது பாவங்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு அவற்றிலே நிலைத்து உழன்று கொண்டிருக்க விரும்பவில்லை; இப்பொழுது, அவைகள் இந்த உலகத்திலே நமக்கு நன்மை ஏதும் செய்வதும் இல்லை. ஆனால் நியாயத்தீர்ப்பு நாளிலே

அவைகள் நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்போகின்றன என்பது உறுதி. அந்த நாளிலே நமது பாவங்கள் நம்மைக் கண்டுபிடித்துவிடும். இது நாம் அறிந்த செய்தியே! நாம் நமது பாவங்களிலிருந்து உண்மையானபடி மனந்திரும்பும் போது நமக்கு என்ன அருமையான விடுதலையும் இளைப்பாறுதலும் நம்பிக்கையும் கிட்டுகின்றது. இது குறித்துக் கடவுள் தமது திருவாக்கில் என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனியுங்கள்:

'தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்' (II பேதுரு 3 : 9).

மனந்திரும்புதலின் ஓர் உண்மையான உதாரணம் இங்கே இருக்கிறது. கெட்ட குமாரனுடைய வரலாறு உங்களுக்குத் தெரியுமா? அவனைக் குறித்து நமக்கு அறிவிக்கப்பட்டுள்ள செய்தியை இங்கே கவனியுங்கள் :

'அவனுக்குப் புத்தி தெளிந்த போது, அவன் : என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் .... என்பேன்? (லூக்கா 15 : 17-18)

உங்கள் வாழ்க்கையிலே உங்களுக்குத் தெரிந்திருக்கின்ற பாவங்களிலிருந்து நீங்கள் மனந்திரும்புங்கள் ..... மனந்திரும்ப மாட்டீர்களா? உண்மையான மனந்திரும்புதலை அடுத்து ஆண்டவரை அறிக்கையிட உறுதியும் விருப்பமும் இயல்பாக வருதல் வேண்டும்.

அறிக்கை செய்யுங்கள்

விசுவாசம் மனந்திரும்புதல் அறிக்கையிடுதல்

32. மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.

33. மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். (மத்தேயு 10 : 32,33)

10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும். (ரோமர் 10 : 10)

14. அதற்கு அவர்கள் : சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

15. அப்பொழுது அவர் : நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.

16. சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.

17. இயேசு அவனை நோக்கி : யோனாவின் குமாரனாகிய சீமோனே. நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். (மத்தேயு 16 : 14–17)

நீங்கள் இப்பொழுது கிறிஸ்து கடவுளின் திருக்குமாரர் என்று அறிக்கையிடுவீர்களா?

இது கிறிஸ்துவை மனிதர் முன்பாக அறிக்கை செய்தலாகும். இந்தப் பொருளைக் குறித்து நமது இரட்சகர் அருளிய ஒரு திருவசனத்தைக் கேளுங்கள் ;

'மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்' (மத் 10:32).

இது மனிதர் முன்பாக நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிடுதல் அன்று. ஆனால், இயேசுவைக் கிறிஸ்து என்றும், அவர் உயிருள்ள கடவுளின் திருமகன் என்றும் ஏற்றுக் கொண்டதனை அறிக்கை செய்தலாகும். இது குறித்துப் பவுலடியார் சொல்லுவதைக் கேளுங்கள்.

'என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன்வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.' (ரோமர் 10:9–10).

இயேசுவானவர் ஒரு தவறும் செய்யாதவராய் இருந்த போதிலும், ஒரு நாள் பொந்தியு பிலாத்துவுக்கு முன்னால் நீதி விசாரனை செய்யப்படுவதற்காக நிறுத்தப்பட்டார். பிலாத்துவின் நீதிமன்றத்தில் நின்றிருக்கும்போது பிலாத்து அவரை நோக்கி : 'நீ ராஜாவோ?' என்று கேட்டான். இயேசு அதற்கு, 'நீர் சொல்லுகிறபடிதான்' என்றார்.

பவுல் அப்போஸ்தலர் ஓர் இளைஞரான ஊழியக்காரருக்கு எழுதும்போது பிலாத்துவுக்கு முன்னர் நடந்த இந்த நிகழ்ச்சியைக் குறித்துப் பேசியுள்ளார். அவர், இது குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள் :

'விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணின வனுமாயிருக்கிறாய் ..... எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்'. (I தீமோ 6 : 12–14).

பிலாத்துவுக்கு முன்னர் அருளிய வாக்கை, பவுல் இங்கே 'நல்ல அறிக்கை' என்று அழைப்பதைக் கவனியுங்கள். இயேசுவே கிறிஸ்து என்றும், கடவுளுடைய திருமைந்தர் என்றும் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்வதே அதன் செயல்முறை.

நல்ல அறிக்கைக்கு இங்கே ஒரு மேன்மையான எடுத்துக்காட்டு இருக்கிறது. இது அப்போஸ்தலராகிய பேதுருவால் செய்யப்பட்டது:

'சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக; நீர் ஜீவனுள்ள தேவ னுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்' (மத் 16 : 16).

நீங்கள் இப்பொழுது, கிறிஸ்து கடவுளுடைய திருக்குமாரர் என்று அறிக்கையிடுவீர்களா? நண்பரே, இயேசு கிறிஸ்து கடவுளுடைய திருக்குமாரர் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? 'ஆம்'. இப்பொழுது நீங்கள் அந்த வாக்குமூலத்திலே அந்த நல்ல அறிக்கையைச் செய்தீர்கள். ஆனால் கவனியுங்கள்; நீங்கள் இன்னும் செய்யவேண்டியது ஒன்று இருக்கிறது.



ஞானஸ்நானம் பெறுங்கள்

விசுவாசம் மனந்திரும்புதல் அறிக்கையிடுதல் ஞானஸ்நானம்

16. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16 :16)

26. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள்.

27. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ் நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ,அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. (கலா. 3 :26, 27)

36. ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்து வுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்

37. இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தல ரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்.

38. பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி. ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப் 2 : 36,37,38)

36. இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.

37.அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை யென்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி:

38. இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

39. அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். (அப்போஸ்தலர் 8 : 36 – 39)

வேதாகம ஞானஸ்நானத்திற்குத் தேவை

1. தண்ணீர்:

இவ்விதமாய் அவர்கள் வழி நடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள், அப்பொழுது மந்திரி இதோ தண்ணீர் இருக்கிறேதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான் (அப் 8 : 36).

2. மிகுதியான தண்ணீர்:

சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்தில் தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங் கொடுத்து வந்தான்: மக்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். (யோவான் 3 : 23)

3. தண்ணீரில் இறங்க வேண்டும் :

இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். (அப் 8 : 38)

4. அடக்கம் செய்தலின் உருவ ஒப்பனை:

ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே. அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.(கொலோசெயர் 2 : 12)

5. பிறப்பின் உருவ ஒப்பனை:

இயேசு பிரதியுத்தரமாக. ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். (யோவான் 3: 5)

6. சரீரங்கள் கழுவப்படுதல்:

துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாகவும் சுத்த தண்ணீரால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாகவும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். (எபிரெயர் 10 :22)

7. தண்ணீரிலிருந்து வெளியேறுதல்:

இயேசு ஞானஸ்நானம் பெற்று தண்ணீரிலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். (மத்தேயு 3 : 16)

8. உயிர்த்தெழுதல் உருவ ஒப்பனை:

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ள வர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு.

அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத் தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப் பட்டோம். (ரோமர் 6 : 4)

திருமுழுக்கு மட்டுமே இந்த விவரங்களை எல்லாம் நிறைவேற்றுகிறது

"ஒரே ஞானஸ்நானமும் ..... உண்டு" எபேசியர் 4 : 5 நாம் கட்டாயம் ஞானஸ்நானம் பெற வேண்டும் இந்தக் கேள்வி மிகமிக முக்கியமானது:

'இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.' (அப் 22 : 16).

நாம் இதுகாறும் ஆராய்ந்து கற்ற சத்தியங்களை எல்லாம் ஒப்புக்கொண்டு, அவற்றை நாம் நமது சொந்த வாழ்க்கைக்கு உரியதாய் ஏற்றுக் கொண்டோம் என்றால் இந்தக் கேள்வி நமக்கு இப்பொழுது மிகமிக முக்கியமானதாகும். இந்தக் கேள்வி முதன் முதல் தர்சு பட்டணத்துச் சவுலைக் கேட்கப்பட்டது. சவுல் பவுலானார். பவுலின் இரட்சிப்பின் வரலாறு உங்களுக்குத் தெரியுமா இல்லையா என்று எனக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரியும் என்றால் நல்லது. அப்பொழுது இந்தக் கேள்வி எழுந்த சூழல்கள் உங்களுக்கு நன்றாக விளங்கும். சவுல் தமஸ்குவிலுள்ள கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்குத் தமஸ்கு சாலையில் சென்று கொண்டிருந்த போது, அவரை மின்னலைப் போன்ற ஒரு பேரொளி தாக்கியது. அந்த ஒளியில் அவர் இயேசு கிறிஸ்துவைக் கண்டார். கிறிஸ்து பவுலுடன் பேசினார். தமக்கு விரோதமாக சவுல் பாவஞ் செய்ததாய் இயேசு அவர்மீது குற்றஞ்சாட்டினார். இப்பொழுது உங்களுக்கு உண்மை தெரிந்திருப்பது போல அன்றைக்குச் சவுலுக்கு உண்மை தெரிந்தது. சவுல் பாவஞ்செய்தார் அவருடைய பாவத்தின் சம்பளம் மரணம் என்பதையும் அவர் அறிந்தார். அவருடைய பாவம் இயேசுவுக்கு விரோதமானது என்பதையும் அறிந்தார். சவுல் இயேசுவைப் பார்த்தபோது, அவர் மெய்யாகவே கடவுளுடைய திருக்குமாரர் என்பதை நன்கு அறிந்து கொண்டார். கிறிஸ்துவின் பாடுகளைக்

குறித்துத் தாம் பிரசங்கத்தில் கேட்டது, தம்து பாவங்களுக்காக அவர் அனுபவித்த பாடுகள் என்பதை அவர் அறிந்தார். அவை எல்லாம் உண்மை என்பதையும் உணர்ந்தார். அப்பொழுது இயேசு தமது பாவங்களின் சம்பளத்தையும் செலுத்தினார் என்பதையும் சவுல் அறிந்துகொண்டார். அவர் சந்தித்த பேரொளி சவுலின் சரீரக் கண்களைக் குருடாக்கியது, ஆனால் அது மெய்யாகவே அவரது இதயத்தின் கண்களைத் திறந்தது. அந்த நிலையிலே சவுல் தமஸ்குவுக்குக் கொண்டுபோகப்பட்டார். அங்கே அவர் மூன்று நாள்கள் இரவும் பகலும் ஒன்றும் குடிக்காமலும் சாப்பிடாமலும் ஜெபம் செய்துகொண்டிருந்தார். (அப்போஸ்தலர் 9:1–9)

சவுல் தமஸ்கு சாலையிலே செல்லும்போது மெய்யாகவே விசுவாசித்து மனந்திரும்பி, இயேசுவைத் தமது ஆண்டவராக ஏற்றுக்கொண்டார் என்று நாம் உறுதியாயச் சொல்லலாம்; ஆனால் அப்பொழுது அவருடைய பாவங்கள் கழுவப்பட்டனவா? இயேசு பெருமானே இந்தக் கேள்விக்கும் பதில் கொடுக்கட்டும்.

'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.' (மாற்கு 16 : 16).

ஆண்டவருடைய எளிய சீடரான அனனியா பின்வரும் கேள்வியை சவுலிடம் கேட்டார்; சவுல் விசுவாசித்தது போல விசுவாசிக்கிறவர்கள் யாவரிடத்திலும் நாம் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்:

"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு' (அப் 22 : 16).

கிறிஸ்துவின் இரத்தம் சிலுவையின்மேல் சிந்தப்பட்டது. ஆனால் கிறிஸ்தவ ஞானஸ்நானத்திலேதான் அவருடைய இரத்தம், ஒருவருடைய சொந்த பாவங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. பேதுரு சொல்வதைக் கேளுங்கள்.

'பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அபபொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.' (அப் 2 : 38).

அடுத்துத் தவிர்க்கமுடியாத நிலையில், இயல்பாய் வருகின்ற கேள்வி, ஒருவருக்கு எவ்வாறு ஞானஸ்நானம் கொடுப்பது? தெளித்தா, ஊற்றியா, அல்லது தண்ணீரில் முழுக்கியா? என்பதாகும். வேதாகமம் இந்த முக்கியமான கேள்வியைக் குறித்து ஏதாகிலும் சொல்லுகிறதா? ஆம், நிரம்ப சொல்லுகிறது.

"இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ , தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு ; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்." அப் 8 : 36 – 39.

மிகுந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரத்திலுள்ள எத்தியோப்பிய மந்திரியும் அவரது பிரசங்கியாரும் இரதத்திலே பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். பிலிப்பு அவருக்கு இயேசுவைப் பிரசங்கம் செய்தார்; மந்திரி, தாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை தெளிவாய் உணர்ந்துகொண்டார். சூழ்நிலைகளை நன்றாகக் கவனியுங்கள் : '..... இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது **பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்**; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம்

கொடுத்தான். **அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது**' ....இத் திருவசனத்தின் மூலம் இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் என்பதை நாம் அறிகிறோம்.. பிலிப்பு மந்திரியின் தலையின்மீது தண்ணீர்த் துளிகள் தெளிக்க வேண்டும் என்றாலோ அல்லது தண்ணீர் ஊற்ற வேண்டும் என்றாலோ, அவர்கள் ஏன் தண்ணீருக்குள் இறங்கவேண்டும்? ஆனால், விவாதத்தின் பொருட்டு இந்தத் திரு வசனத்தின் மூலம் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டமுறை (பாப்டைஸ் என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் ஒரு புறம் இருக்க) என்ன என்பதை நம்மால் கண்டு பிடிக்க முடியவில்லை; பிலிப்பு மந்திரிக்கு எப்படி ஞானஸ்நானம் கொடுத்தார் என்பதும் நமக்குத் தெளிவாகவில்லை என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் நீங்கள் ஆழ்ந்த ஜெபத்துடன் பின்வரும் செய்தியைத் திருவசனப் பகுதிகளுடன் படியுங்கள். உங்களுடைய எல்லா வினாக்களுக்கும் விடை கிடைக்கும் – உங்கள் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்துவிடும். வேதாகம ஞானஸ்நானத்திற்கு என்ன தேவை?

"(1) தண்ணீர் (அப் 8 : 36); (2) மிகுதியான தண்ணீர் (யோவான் 5:23); (3) தண்ணீரில் இறங்குதல் (அப் 8 : 38); ,(4)அடக்கத்தின் உருவ ஒப்பனை (கொலோ 2 : 12) (5) பிறப்பின் உருவ ஒப்பனை (யோவான் 3 : 5) (6) சரீரம் கழுவப்படுதல் (எபி 10 : 22) (7) தண்ணீரிலிருந்து வெளியேறுதல் (அப் 8 : 39; மத் 3 : 16); (8) உயிர்த்தெழுதலின் உருவ ஒப்பனை (ரோமர் 6 : 4)"

எனவே, இந்த விளக்கங்களை எல்லாம் நாம் ஆராய்ந்ததன் விளைவாக நாம் பெறும் தவிர்க்கமுடியாத முடிவு; **'இவை எல்லாவற்றையும் முழுக்குதல் மட்டுமே நிறைவு செய்கிறது'** என்பதாகும். எனவே, ஒரே ஞானஸ்நானம் உண்டு. எபே 4 : 5.

நண்பரே! நீங்கள் திருமுழுக்குப் பெற்றிருக்கிறீர்களா? இல்லை என்றால், நீங்கள் திருமுழுக்குப் பெற விரும்புகிறீர்கள் அல்லவா?'

நற்செய்தியின் நன்மைகள்

1. பாவ மன்னிப்பு

> "ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எபிரேயர் 8 : 12).

2. பரிசுத்த ஆவியின் வரம்

> "நீங்கள் மனந்திரும்பி, ... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 2 : 38)
>
> நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனிதனில் வல்லமையாய்ப் பலப்படவும்." (எபேசியர் 3 : 16)

3. கடவுளின் பராமரிப்பு

> "என் தேவன் தம்முடைய, ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். (பிலிப்பியர் 4 : 19)
>
> அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்." (I பேதுரு 5 : 7)

4. நித்திய வாழ்வு

> குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். (யோவான் 3 : 36)

நற்செய்தியின் நன்மைகள் பொன்னிலும் மேலானவை

நாம் இதுகாறும் ஆராய்ந்து வந்த இந்த அற்புதமான இரட்சிப்பின் திட்டத்தை நமது ஆண்டவராகிய இயேசு உலகத்தில் இருந்த போது கூறியிருக்கிறார். அவர் இதனை ஓர் உருவக வடிவத்தில் பேசினார். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள்:

'அன்றியும். பரலோக ராச்சியம் (அல்லது கிறிஸ்துவில் இருக்கும் நமது இரட்சிப்பு) நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனிதன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய மகிழ்ச்சியினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். (மத் 13 : 44)

என்ன மகத்துவமான ஒரு கண்டுபிடிப்பு, நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம். இந்தக் கண்டுபிடிப்பு மகிழ்ச்சியால் நிரம்ப வேண்டும் என்று இயேசு சொல்லுகிறார்; அது மெய்யாகவே நம்மை மகிழ்ச்சியால் நிரப்புகிறது. நண்பரே, நான் இதுகாறும் விளக்கிக் கூறிக்கொண்டு வருகிற இந்த இரட்சகரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது நீங்கள் என்ன ஆவீர்கள் என்று நினைக்கிறீர்கள்? ஒரு மெத்தோடிஸ்டா, பிரஸ்பிடீரியனா, புரொட்டஸ்தாந்தா அல்லது கத்தோலிக்கரா? இல்லை; இவற்றுள் ஒன்றுமில்லை. அது உங்களைப் பரம எளிமையுடன் ஒரு கிறிஸ்தவராக்கும். நீங்கள் கிறிஸ்தவராக விரும்புகிறீர்கள் என்பதை நான் அறிவேன். நீங்கள் விரும்பவில்லையா? நீங்கள் இந்த இரட்சகரை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குக் கிட்டும் சிறந்த நன்மைகளைப் பாருங்கள்.

நற்செய்தியின் நன்மைகள் பொன்னிலும் மேலானவை. அவற்றுள் சில பின் வருமாறு.

1. பாவமன்னிப்பு: (உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டு பின் வரும் திருவசனத்தைப் படியுங்கள்)

'ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.' (எபி. 8 : 12).

கடவுள் நம் பாவங்களை மன்னிக்கும்போது அவர் அவற்றை மறந்தும் விடுகிறார்! இது நமது இதயத்திற்கு எவ்வளவு ஆறுதலான செய்தியாகும். ஏன் எனில், நாம் யாருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தோமோ அவர் நமது பாவங்களை மன்னித்து மறந்து விடுவதால் நாமும் அவ்வாறே மற்றவர்களுக்குச் செய்தல் இலேசாகிறது.

2. நமது ஆண்டவர் உங்களுக்கு ஓர் அருமையான பிறந்த நாள் அன்பளிப்பு அருளுகிறார்! நீங்களும் நானும் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்பித் திருமுழுக்குப் பெறும்போது நமக்குள்ளே பரிசுத்த ஆவியானவரின் வருகை வாக்கருளப்பட்டுள்ளது. இந்த அழகான வாக்குறுதியைக் கவனியுங்கள்.

'நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.' (அப் 2 : 38).

பரிசுத்த ஆவியானவர் நமது சரீரங்களுக்குள் வரும்போது, அவர் நமது உள்ளான மனிதனுக்கு வல்லமை அருளுவதற்காக வருகிறார்.

இங்கே கவனியுங்கள்.

'நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனிதனில் வல்லமையாய்ப் பலப்படவும்.' (எபே 3 : 16).

கடவுளும் கிறிஸ்துவும் அவர்களுடைய பிரதிநிதியாகிய பரிசுத்த ஆவியானவர் மூலம் நம்மில் வாழ்கின்றனர் என்பதை அறிதல் எவ்வளவு அருமையாக இருக்கின்றது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே தங்கி வாழ்கிறபடியால் கடவுளும் கிறிஸ்துவும் வாழ்கிற ஆலயங்களாக நாம் இருப்பது நமக்குச் சொல்லுக்கடங்காத மகிழ்ச்சியைக் கொடுக்கும் செய்தியாக இருக்கிறது!

3. எல்லாம் இவை மட்டும் அல்ல. நமது பரலோகப் பிதாவின் மேலான பராமரிப்பு நமக்கு உண்டு. நாம் இயேசுவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது கடவுள் நமது தந்தையாகின்றார். உங்களிலும் என்னிலும் அவர் கொண்டுள்ள அக்கரையை அறிவதற்கு இத்திருவசனங் களையும் பாருங்கள்:

'என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமை யிலே நிறைவாக்குவார். (பிலிப் 4 : 19).

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.' (I பேதுரு 5 : 7).

இத்தகைய ஒரு வாக்குறுதி நமக்கு இருப்பது அருமையான காரியம் அல்லவா? ஆம் உண்மையிலேயே இது இவ்வுலகில் நமக்குக் கிட்டியுள்ள ஓர் அரிய பெரிய சிலாக்கியம்.

4. நமக்கு இப்பக்கத்திலுள்ள இறுதியான அரிய பெரிய வாக்குறுதி பரலோகத்தைப் பற்றியது. இயேசு கூறினார்! குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். இத்திருவசனத்தின் அடுத்த பகுதி குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும். என்றும் எச்சரிக்கிறது. நண்பரே, நீங்கள் கடவுளுடைய திருமைந்தர் மீது விசுவாசம் வைத்து அவருக்குக் கீழ்ப்படிய விரும்புகிறீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன், அப்படித்தானே?

இங்கே அற்புதமான நற்செய்தி இருக்கிறது.

இப்பொழுது நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது தள்ளிவிடலாம்.

இப்பொழுது நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது அவரைத் தள்ளிவிடலாம்.

பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.

மத்தேயு 27:22

நீங்கள் இயேசுவை என்ன செய்யப்போகிறீர்கள் ?

சத்தியம் 10

இங்கே யூதேயா நாட்டின் கவர்னர் இயேசுவை நீதி விசாரணை செய்கிறார். கவர்னர் இயேசுவை என்ன செய்யலாம் என்பதைத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்; இங்கே கூடியிருந்த மக்களையும் இயேசுவைக் குறித்து ஒரு முடிவுக்கு வருமாறு கேட்கிறார். கவர்னர் என்ன கேட்கிறார் என்பதைக் கவனியுங்கள்.

> 'பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால் கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான்'. (மத் 27 : 22).

கூடியிருந்த மக்கள் கூட்டமும் பிலாத்துவும் அவரைச் சிலுவையில் அறைவதற்குத் தீர்மானித்தார்கள். இக்கேள்விக்கு விடை சொல்ல வேண்டியது இன்று நம்மீதும் விழுந்துள்ள தவிர்க்க முடியாத கடமையாக இருக்கிறது. இயேசுவை நீங்கள் என்ன செய்ய போகி றீர்கள்?

அவரை உங்களுடைய சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் நீங்கள் ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்பதை நான் அறிவேன். இதுதான் உங்களுடைய முடிவு அல்லவா நண்பரே?

இவை எல்லாம் எவ்வளவு அருமையாயும் எளிமையாயும் இருக்கின்றன!

10. SOR
PV04

1. "இயேசுவே கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள், அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள் கிறீர்கள் .... இல்லையா?"

2. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அறிந்திருக்கின்ற பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறீர்கள் .... இல்லையா?

3. நீங்கள் இப்பொழுது கிறிஸ்து கடவுளின் திருக்குமாரர் என்று அறிக்கை செய்வீர்களா?

4. "நீங்கள் எப்பொழுது திருமுழுக்குப் பெற விரும்புகிறீர்கள்?"

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்ற தாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்".

(II. தெச. 5 : 23, 24).

எங்களது வேத ஆராய்ச்சி வெளியீடுகள்

1. **தேவனின் சத்தியம்**
   டாக்டர். ஜேக் காட்ரெல்

2. **வேதாகமத்தில் உள்ள திருச்சபை**
   பேரா. டான் டீவெல்ட்

3. **பரிசுத்த ஆவி**
   பேரா. டான் டீவெல்ட்

4. **இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு காலவரிசைக் குறிப்பேடு –**
   R.C. பாஸ்டர்

5. **தக்க தருணத்திற்கு உதவும் சத்தியங்கள் பத்து**
   பேரா. டான் டீவெல்ட்

நூல்கள் கிடைக்குமிடம்

தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம்

378/24 ஆர்.கே. பிளாட்ஸ்
19வது பிரதான சாலை
அண்ணா நகர் மேற்கு
சென்னை – 40

பஜார் வீதி
பிச்சாட்டூர்
சித்தூர் மாவட்டம்
ஆந்திர பிரதேசம்
✆ : 08576-65748